14th December 1959]

THE HON. SRI P. KAKKAN: The scheme for acquisition of house-sites for Harijans is also applicable to the other backward communities eligible for help by the Harijan Welfare Department and to the landless labourers of fixed abode. In their cases, where they cannot afford to pay the full cost, the Government bear as a special concession, half the cost of the acquisition of the portions actually occupied as house-sites, subject to a maximum of Rs. 150 per acre for dry land, Rs. 350 per acre for wet land and Rs. 250 per acre for garden land.

SRI A. R. MARIMUTHU: தலைவர் அவர்களே, கூலி வேலை செய்கின்ற விவசாயிகளை அரசாங்கம் ஹரிஜனங்களைவிட மேலானவர்கள் என்று கருதுகிறார்களா? அவர்கள் ஹரிஜனங்களை விடவும் கீழான நிலையில் இருந்து வருவதினால் அவர்களுக்கும் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படுவது போல மனைக்கட்டுக் கொடுப்பதற்கு அரசாங்கம் யோசிக்குமா?

THE HON. SRI P. KAKKAN: ஹரிஜனங்களை விட ஏழைகள் பலர் இருக்கின்றார்கள் என்பது உண்மைதான். ஆனால் ஹரிஜனங்களுக்கு எந்த அடிப்படையில் மனைக்கட்டுக்கள் போன்ற வசதிகள் கொடுக்கப்படுகிறது என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நம்புகிறேன். ஹரிஜனங்களுக்கு கொடுக்கப்படுகிற வசதிகளை எல்லா ஏழைகளுக்கும் கொடுக்க முடியாது. வீடுகள் கட்டிக்கொடுக்கும் விஷயத்தில் நில ஆர்ஜிதம் செய்து கொடுப்பதில் அரசாங்கம் இதர ஏழைகளுக்கும் பாதி அளவு சலுகை செய்து கொடுக்கும்.

SRI P. S. CHINNADURAI: கனம் சபாநாயகர் அவர்களே, ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் மற்ற ஏழைகளுக்குக் கொடுக்க முடியாது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படியானால் இதர ஏழைகளை எல்லாம் ஹரிஜன மதத்தில்—(சிரிப்பு)—ஹரிஜன இனத்தில் கன்வர்ட் செய்வதற்குக் கனம் அமைச்சர் அவர்கள் ஏதாவது வழி செய்து தருவார்களா?

THE HON. SRI P. KAKKAN: ஒரு மதத்திலிருக்கின்றவர்களை இன்னொரு இனத்தில் கொண்டு வரவேண்டும் என்று சொல்வது சரியல்ல. அதற்கு எனக்கு வழியும் தெரியாது.

House for Harijans

* 155 Q.—SRI M. K. SOMASUNDARAM (on behalf of SRI M. S. SELVARAJAN): Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether there is any proposal to raise the amount fixed towards the construction of houses for Harijans from Rs. 750 to Rs. 1,000; and

(b) if so, from when?

THE HON. SRI P. KAKKAN: (a) & (b) The question of revising the type design for the houses to be put up for Harijans, which would involve a higher expenditure than at present is under the consideration of the Government.

[14th December 1959

Sri M. K. SOMASUNDARAM : ஸார், இப்போது கொடுக்கப் படும் 750 ரூபாய் அவர்களுக்கு வீடு கட்டுவதற்குப் போதாமல் இருப்பதால் இதை 1,000 ரூபாய் என்று உயர்த்துவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Sri P. KAKKAN : இப்போது கொடுக்கப்படுகிற 750 ரூபாய் போதாது என்று மாகாண ஹரிஜன வெல்பேர் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறுர்கள். அதை இந்த அரசாங்கம் மத்திய சர்க்காருக்கு அனுப்பி வைத்திருக்கிறது.

Sri M. P. PERIASAMI : கனம் தலைவர் அவர்களே, ஹரிஜனங் கள் மட்டுமென்று இல்லாமல், ஹரிஜனங்கள் இல்லாதவர்களாய் இருந்தாலும் சரி, ஜாதி இந்துக்களாய் இருக்கிறவர்களுக்கும் சரி, பிராமணர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் ஏழைகளாக இருந் தால், அவர்களுக்கு வீடு கட்டி கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது ஆதரவு கொடுக்குமா ? அவ்விதம் ஜாதி இந்துக்கள் போன்றவர்களுக்கு இவ்விதம் ஆதரவு கொடுப்பதற்கு ஏதாவது வரம்பு இருக்கிறதா ?

Mr. SPEAKER : இதற்கும் மூலக்கேள்விக்கும் சம்பந்தமில்லே.

Sri P. G. MANICKAM : ஸார், சென்ற வருடம் டெல்லியில் நடந்த மந்திரிகள் மகாநாட்டில், நமது மந்திரி அவர்கள் இப்போது கொடுக்கப்பட்டு வரும் ரூ. 750 போதாது என்று குறிப்பிட்டு, அதற்கு ஆயிரம் ரூபாய் வேண்டும் என்று கேட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் மத்திய சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

The Hon. Sri P. KAKKAN : முடிவு இதுவரையிலும் தெரி விக்கப்படவில்லே.

Sri R. KRISHNASAMI NAIDU : மாகாண ஹரிஜன நல கமிட்டி ஆயிரம் ரூபாய் கொடுக்கவேண்டும் என்று சிபாரிசு செய் திருந்ததில், ஒவ்வொருவருக்கும் இரண்டு பனமரங்கள் வீடு கட்டுவதற்கு கொடுக்கவேண்டும் என்று அந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதா இல்லேயா என்பதை தெரிவிக்கவேண்டு கிறேன்..

The Hon. Sri P. KAKKAN : ஒவ்வொருவருக்கும் இரண்டு பனே மரங்கள் கொடுக்கவேண்டு மென்றிருக்கிறது.

Sri V. SUBBIAH : ஸார், இப்போது கொடுக்கப்படும் 750 ரூபாயில் கட்டப்படும் வீடுகள் எல்லாம் இப்போது மழையிலும் காற்றிலும் சேதமடைந்து வருவதால் கூடுதலான அளவு பணம் கொடுத்து நல்ல முறையில் வீடுகளேக் கட்டுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

The Hon. Sri P. KAKKAN : இதற்காகத்தான் அரசாங்கம், மாகாண ஹரிஜன வெல்பேர் கமிட்டியின் சிபாரிசுகளே மத்திய சர்க்காருக்கு அனுப்பி பரிசீலனே செய்ய கேட்டுக்கொண்டிருக் கிறது.

14th December 1959]

SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : தற்சமயம் கிராமப்புறங்களில் இருக்கும் ஹரிஜனங்களுக்குத்தான் இந்தச் சலுகை கொடுக்கப்படுகிறது. பொருளாதார நிலையில் நகரப்புறங்களில் உள்ள ஹரஜனங்கள் கிராமப்புறங்களில் உள்ள ஹரிஜனங்களைவிடச் சிறந்தவர்கள் என்று நாம் சொல்ல முடியாது. எனவே இனிமேல் இந்த 750 ரூபாய் நகரப்புறங்களிலுள்ள ஹரிஜனங்களுக்கும் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். 9–30 a.m.

THE HON. SRI P. KAKKAN : வீடு கட்டும் விஷயத்தில், நகரப்புறங்களிலுள்ள ஹரிஜனங்களின் நிலைமையையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அவர்களுக்கும் உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் முதலில் சென்னை நகரை இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்டோம். அதற்குப் பிறகு திருச்சி, சேலம், கோயம்புத்தூர், மதுரை முதலிய நகரங்கள் எடுத்துக்கொள்ளப் பட்டன. இனிமேல்தான் மற்ற நகரங்கள் கவனிக்கப்படும்.

SRI T. KARIA GOUNDER : மலையில் வசிக்கும் மலைவாசிகளுக்காவது 1,000 ரூபாய் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

MR. SPEAKER : This question is about Harijans.

SRI T. KARIA GOUNDER : நான் 'ஹில் ட்ரைப்ஸ்'-ஐப் பற்றிக் கேட்கிறேன் ; ஆதிவாசிகளைப் பற்றிக் கேட்கிறேன்.

MR. SPEAKER : Do they come under the category 'Harijans'?

SRI T. KARIA GOUNDER : Yes, Sir.

THE HON. SRI P. KAKKAN : மலையில் வசிக்கும் ஆதிவாசிகளுக்கும் அதிகப்படியாக ரூபாய் கொடுத்து உதவி செய்யப் படுகிறது.

Rural Housing Schemes

* 156 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the amount allotted for 1958–59 under the State Rural Housing Schemes was not utilized ; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) No Sir. The amount allotted was fully utilised.

SRI K. SATTANATHA KARAYALAR : மொத்தம் ஒதுக்கப் பட்ட தொகை எவ்வளவு? அதில் திட்டமிட்டபடி கட்ட வேண்டிய கட்டிடங்கள் எவ்வளவு? அவை கட்டப்பட்டு விட்டனவா, அதாவது 'பிஸிகல் டார்கெட்ஸ்' 'அசீவ்' செய்யப் பட முடிந்ததா ?

THE HON. SRI V. RAMAIAH : 1958-59-க்கு ஒதுக்கப்பட்ட தொகை மொத்தம் 3 லட்ச ரூபாய். அதில் வீடு கட்டுவதற்காகச் செலவிடப்பட்டிருப்பது ரூ. 2,99,700.